# வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார்? - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், வாழ்க்கை  ஆச்சரியம் நிறைந்திருப்பதை பற்றி பார்க்க இருக்கிறோம். ஒருநாள் நீங்க ரொம்ப சந்தோஷமா இருப்பதாக தோன்றும், மறுநாள் மருத்துவர் உங்களுக்கு வாழ்நாள் முழுதும் தீராத பெலவீனம் இருப்பதாக சொல்லலாம். விபத்துகள், இயற்க்கை சீற்றங்கள், குற்றங்கள், இயலாமை போன்றவை எந்த நொடியிலும் வாழ்க்கையை திருப்பி போடா வாய்ப்புண்டு. அப்படி நடக்கும் போது, ஜனங்க கேட்ப்பாங்க, “வாழ்க்கையில் இந்த மாதிரியான வேதனைகளில் தேவன் எங்கதான் இருக்காரு? அப்படி பட்ட மக்கள் அவர்களை காட்டிலும் அதிக வலியும் வேதனையும் அனுபவிக்கும் மக்களிடமிருந்து பதில்களை பெற வேண்டும். இன்றைக்கு அப்படிப்பட்ட இரண்டு பேரை பார்க்க இருக்கிறோம்.

ஜோனி எரிக்சன் டாடா தனது பதினேழு வயதில் நீச்சலடிக்க குதித்த போது தனது தண்டுவடத்தை உடைத்துகொண்டார்கள், அதினால் குவாட்ரிப்லீகியா ஏற்பட்டது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக சக்கர நாற்காலியில் தான் இருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, அவர்களுக்கு

மார்பக புற்றுநோயும் இருக்கிறது, ஒவ்வொரு நாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார்கள். Dr. மைகேல் எஸ்லே இவர் மூடி வேதாகம கழகத்தின் முதல்வராக இருந்தார், ஆனால் தாங்க முடியாத கடுமையான வேதனை உண்டான போது ராஜினாமா செய்துவிட்டார். அவர் வேதனை மிகுந்த பல அறுவை சிகிச்சைகளை செய்து இருக்கிறார், மருத்துவர்கள் அவருடைய தண்டுவடத்தின் அனைத்து தட்டுகளையும் அகற்றி அவருடைய ஜீவனை காப்பாற்ற எல்லா எலும்புகளையும் ஒன்று சேர்த்து தண்டுவடத்தை நிற்க வைத்திருக்கிறார்கள். இப்போது அவர் பிறேன்ட்வுட் பெல்லோஷிப் பைபிள் திருச்சபையை நடத்தி வரும் போதகராக இருக்கிறார், டேநேன்சீ, ஆனாலும் ஒவ்வொருநாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார். வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார் என்பதற்கு இவர்கள் இருவரும் பதிலளிக்க இருக்கிறார்கள். இந்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியின் விசேஷித்த தொகுப்பை காண அன்போடு அழைக்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் தான் ஜான் அன்கேர்பர்க், உங்களை பார்ப்பதில் மகிழ்ச்சி. இன்றைக்கு நம்முடன் இருக்கும் இரண்டு விருந்தினர்களை பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், Dr. மைகேல் எஸ்லே மற்றும் ஜோனி எரிக்சன் டாடா. இப்போது மிக முக்கியமான ஒரு கேள்வியை

வைத்திருக்கிறோம்: விசுவாசத்தோடு உண்மையாய் தம்மை நோக்கி வருகிறவர்களை சுகப்படுத்த வேண்டும் என்பதுதான் தேவனுடைய சித்தமா? பெலவீனப்பட்டிருந்தால், இயலாமையில் இருப்பீர்களானால், அல்லது வேறு ஏதாவது சூழ்நிலையை நீங்கள் எதிர்கொண்டு வந்திடலாம் அதற்கான விடையை அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்களா,தேவன் எனக்காக என்ன செய்வார்? வேதம் இதை குறித்து என்ன சொல்கிறது? இப்ப நீங்க சொல்லுங்க, ஜோனி, ஏன்னா ஒரு கிறிஸ்தவரான நீங்க சுமார் 50 ஆண்டுகளாக உங்க கழுத்து முறிவுனால இந்த சர்க்கார நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்கள், அப்பறம் மார்பக புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது, இப்ப உங்க திருவெலும்பில் ஏற்பட்ட விரிசல் காரணமாக தீராத வலியும் வேதனையும் ஒவ்வொரு நாளும் அனுபவித்து கொண்டு இருக்கிறீர்கள்.

ஜோனி எரிக்சன் டாடா: ஓ, மை குட்னஸ், பல முறை. அதாவது, என்னோட கழுத்து முறிவு ஏற்பட்ட போது நா மருத்துவமனையில் இருந்தது நினைவிற்கு வருகிறது, என்னை பார்க்கும்படி மருத்துவமனைக்கு வருகிற என்னோட நண்பர்களிடம் கேட்பேன் அவங்க எனக்கு வேதத்தை கொண்டு வந்து தருவாங்க, எங்கிட்ட எப்பவும் கேட்கப்பட்ட கேள்வி, “நாங்க உனக்கு எந்த பகுதிய வாசிக்கும்படி விரும்புகிறாய்? அதுக்கு நா பொதுவா எப்போதும் சொல்ற ஒரே பகுதி யோவான் 5. உங்களுக்கும் அந்த வேத பகுதி

நல்லா தெரிந்திருக்கும். ஆமா, “எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டுவாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு. அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக்கொண்டிருப்பார்கள். ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்திலே இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதிஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான். முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான். படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார்.” பார்வையாளர்கள் நேரம் முடிந்த பிறகு என்னை நான் அந்த இடத்தில் வைத்து கற்பனை செய்திடுவேன், விளக்குகள் அணைந்த பிறகு, நர்சுகள் எல்லாரும் போன பிறகு, என்னோட அறையிலிருக்கும் மற்றவர்கள் தூங்கிடுவாங்க. நா கற்பனையை ஆரம்பித்திடுவேன் நான் பெதேஸ்தா குலத்துகிட்ட இருக்கே, இன்னொரு முடக்குவாதமுடைய நபரோடு அந்த பாயில படுத்துட்டு இருக்கிறமாதிரி கற்பனை செய்திடுவேன், கெஞ்சிட்டு, நம்பிக்கையோடு, ஜெபித்துக்கொண்டு, இயேசு என்னை கடந்து போக கூடாது என்று வேண்டுகொண்டு

இருப்பேன்; அவரால என்னை சுகப்படுத்த முடியும், வர் என்னை தொடுவார் என்றிருப்பேன்.

ஆனா நா மருத்துவமனையில் இருந்த இரண்டு வருடங்கள், அதுல ஒரு வருஷம் நா ஸ்டேட் இன்ஸ்டிடுஷன் ல கீரியாடிக் வார்ட்ல இருந்தேன், என்னோட கைகள் கால்கள் எந்த அசைவையும் தரள. நா நடக்கவும் இல்ல. ஏமாற்றத்தோடு நான் மருத்துவமனையை விட்டு வெளியேறினேன். ஆனா நா என்னோட அக்காவோடு இருப்பதற்காக மேரிலான்ட் பண்ணை வீட்டிருக்கு சென்ற போது, ஒருநாள் காலையில் கிறிஸ்தவ தொலைகாட்சியை பார்த்துகொண்டு இருந்தோம், அதில் ஒரு விளம்பரத்தை கேட்டோம், அதுல விசுவாசம் நிறைந்த பிரசித்திபெற்ற சுகமளிக்கும் ஊழியர் வருவதாக சொல்லப்பட்டது வாஷிங்டன், DCக்கு. சுகத்தை பெற்றுக்கொள்ள விரும்புகிற எல்லாரும் வரலாம் என்பதுதான் அந்த அழைப்பு. அடுத்த வெள்ளி கிழமை இரவு, முதல் முறையா சுகமளிக்கும் கூட்டத்திற்கு சென்றோம். அத என்னால மறக்கவே முடியாது ஹில்டன் ஹோட்டலோட பெரிய அரங்கத்திற்குள் நுழைந்தோம் டவுண்டவுன் வாஷிங்டன், DC. அந்த இடம் முழுவதும் மக்கள் கூட்டம். அங்கிருந்த ஊழியர்கள் என்னை சக்கர நாற்காலிகள் இருக்கும் பகுதிக்கு கூட்டீட்டு போனாங்க அங்க என்னை தவிர இன்னும் ஐம்பது அறுவது பேர் வீல்சேர் மற்றும் வாக்கரோடு அமர்ந்திருந்தார்கள். எல்லாரும் ஆர்வத்தோடு இருந்தோம்.

சரி, இந்த சுகமளிக்கும் வீரர் ஆரவாரத்தோடு மேடையின் மீது வந்து நின்றார். பிரகாசிக்கும் ஒலி அவரை சுற்றியது, இசை வாசிக்கப்பட்டது, சாட்சிகளும் வசனங்களும் அங்கு வாசிக்கப்பட்டது. அப்பறம் அந்த ஸ்போட் லைட் ஒரு முனையில் இருந்த மக்கள் மீது திருப்பப்பட்டது, அது எந்த பக்கம் திருப்பப்பட்டதோ அங்கிருந்த நபர்கள் சுகம் பெற துவங்கினார்கள். அது அப்பறம் வேறொரு பக்கம் திருப்பப்பட்டது கரகோஷங்கள் அதிகமாக இருந்தது, அதிகமான சாட்சிகள், அதிகமான சுகங்கள். நா வீல்சேர் பகுதியை பார்த்து எனக்குள்ளே சிந்தித்து கொண்டு இருந்தேன், “சரி, பரிசுத்த ஆவியே, கடினமான வியாதியோடு இருக்கிற எங்கள் பக்கமாக திரும்பிடும். எங்களை குணமாக்கும் என்றேன்.” ஆனா ஸ்பாட் லைட் வீல்ச்ர்கள் இருந்த பகுதிகளுக்கு திரும்பிடவே இல்லை.

கிட்டதட்டா ஒன்றரை மணி நேரத்திற்கு பிறகு, இரண்டு மணிநேரம், கழித்து உதவியாளர்கள் வந்து எங்களை முதலில் வெளியே கொண்டு வந்து விட்டார்கள், படிகளில் எந்தவித கூட்ட நெரிசல்களும் இருக்க கூடாது என்பதற்காக அப்படி செய்தாங்க. ஆனா நான் அந்த இடத்தில், 35 பேர் இருந்த வரிசையில் 15 வது நபராக என்னோட இயலாமையில் ஏமாற்றத்தோடு உட்கார்ந்திருந்தேன், எல்லாரும் சக்கர நாற்காலியில் இருந்தாங்க, வெள்ளை தடிகள், வாக்கர்கள், வைத்துகொண்டு நின்றுகொண்டிருந்தார்கள். எங்களோட அந்த அமையான சூழலில் நான் என்னோட வரிசையில் இருந்து மேலும் கீழும் பார்த்துட்டு

இருந்தேன், இதுல ஏதோ ஒரு பிரச்சனை இருக்குது. அதாவது, எப்படிப்பட்ட இரட்சகர் நமக்கு இருக்கிறார், எப்படிப்பட்ட சுகமளிப்பாளர், எப்படிப்பட்ட சுகமளிக்கும் நபர், எப்படிப்பட்ட மீட்பர், ஒரு முடமாக இருக்கும் நபருடைய ஜெபத்தை கேட்க்க கூடாத நிலையில் தோல்வியடைந்த மீட்டபரா அவர்?

அந்த சூழ்நிலை என்னை அதிக மன அழுத்தத்திற்குள் கொண்டு போய் விடுவதற்கு மாறாக, உண்மையில் அது என்னை தேவ வார்த்தயில் ஆழமாக இழுத்து சென்றது, ஏன்னா இந்த தேவன் யார் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்பினேன். விசுவாசத்தோடு தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு பதில் கொடுக்கிறவர் என்பதாக தான் இதுவரைக்கும் அவரை பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம் என்று சொல்லலாம். யாக்கோபு என்னும் புத்தகத்தில், ‘ஒருவன் வியாதிப்பட்டவனாக இருந்தால் சபையின் மூப்பர்களை அழைத்து, அவர்கள் எண்ணெய் பூசி, ஜெபிக்கவேண்டும். நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் என்று இருக்கிறது. இன்னொரு இடத்தில் யோவான் 15:7ல், இயேசுவே கூறியிருக்கிறார், “நீங்கள் என்னிலும் என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுகொள்வது எதுவோ அது உங்களுக்கு அருளப்படும்.”இதெல்லாம் தேவன் நிச்சயம் சுகப்படுத்தி தான் ஆகவேண்டும் என்பதை உறுதிசெய்கிறது. இருந்தாலும் என்னோட விரல்களுக்கும் கால்களுக்கும் எந்தவித அசைவும் இல்லை. என்னோட

நண்பர்களை அழைத்து நான் சொன்னேன், “அடுத்த முறை நீங்க என்னை பார்க்கும்போது நான் எழுந்து நடப்பேன் என்றேன்.” ஏன்னா எனக்கு சந்தேகமே இல்லைன்றத அவங்களுக்கு தேவனுக்கும் நிருபித்து காட்டும்படியா விரும்பினேன். அதாவது நிச்சயம் தேவன் என்னை சுகபடுத்திடுவார் என்றிருந்தேன். இருந்தாலும் ஒன்னும் நடக்கல. மேலும் தேவனுடைய வார்த்தையில் நான் கண்டுபிடித்த இன்னொரு விஷயம் என்னை அதிர்சியாக்கினது.

**ஆன்கர்பெர்க்:** சரி, இங்கிருக்கிற சில காரியங்களை இறையியல் கண்ணோட்டத்தில் பார்க்கலாமா. உங்க புத்தகத்தில் சொல்லியிருக்கீங்கள்ள, ‘தேவன் சுகப்படுத்துவாரா? நிச்சயம் சுகமாக்குவார் என்பதில், நீங்க ஏசாயா 59:1 றை சொல்லியிருக்கீங்க அதாவது, “இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. இப்ப தேவனால் சுகப்படுத்த முடியுமா முடியாதா என்பது ஒரு கேள்வியே இல்லஇ அவரால முடியும். இப்ப எனக்கு தோன்றிய மற்றொரு கேள்வி என்னன்னு கேட்டாஇ தேவன் இந்த 21வது நூற்றாண்டில் சுகப்படுத்துவாரா? நிச்சயமாக சுகமாக்குவார்இ என்று முடித்திருக்கீங்கஇ ஏன்னா உலகம் முழுவதும் இதற்கான ஆதாரமாக பலருடைய சாட்சிகள் இருக்குது.

டாடா: சரி, எபிரேயர் புத்தகத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது, இயேசு நேற்றும் இன்றும் என்றும் என்றென்றும் மாறாதவராக இருக்கிறார்.

இந்த பூமியில் வாழ்ந்தப்ப இயேசு சுகப்படுத்தினார் என்றால், இப்போது ஏன் அவர் சுகப்படுத்தவில்லை?

**ஆன்கர்பெர்க்:** மைகேல், உங்களுக்கு பிடித்த பகுதிகளில் ஒன்று சங்கீதம் 103 அங்க தா சொல்லியிருக்கிறது, "என் ஆத்துமாவே கர்த்தரை, ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே,"அதுல பட்டியலும் இருக்கு, "... நம்முடைய அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து நம்முடைய நோய்களை எல்லாம் குணமாக்கினார். இதுல இருந்து நீங்க என்ன சொல்ல விரும்புறீங்க?

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:** சரி, வேதபகுதிகளில் இருந்து தேவன் தான் சுகம் தருபவர் என்பதை அறிந்திருக்கிறோம். மருத்துவர்கள் என்னை கூறுபோட்டு, உள்ள மெட்டல் வைத்து, ஸ்குரூ போட்டு ஓட்டுகிறார்கள். அறுக்கிறார்கள், ஆனா தேவன் தான் நமக்கு சுகமளிக்கிறவராக இருக்கிறார். அதனால யாரோ ஒருத்தர் நாம எல்லாரும் சுகமாகிடுவோம் என்று சொல்ல முடியாது, நம்முடைய சுகத்தை அனுபவிக்க தேவன் நமக்காக என்ன செய்தார் என்பதை புரிந்துகொள்ளும் மனப்பான்மையில் இருக்கிறது,.

**ஆன்கர்பெர்க்:** சரி, ஜோனி, மறுபடியும் உங்ககிட்ட வர்ரேன். நீங்க உண்மையான கேள்விய முன்வைத்தீர்கள், தம்மிடத்தில் விசுவாசத்தோடு கேட்கிற எல்லாரையும் சுகப்படுத்த வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் தானா? சுகத்தை குறித்ததான நம்முடைய

விண்ணப்பங்களுக்கு அவருடைய பதில் எப்போது சரி என்பதாக தான் இருக்குமா? அற்புதமான சுகமளித்தல் என்பது அவருடைய முதல் ஆப்ஷனாக இருக்கிறதா? இதுதான் இங்கிருக்கிற பிரச்சனை. சில கிறிஸ்தவ சபைகளில் காணப்படுகிற பெலகீனம் இதுதான் அதாவது உங்களுக்கு பரிபூரணமான சுகம் கிடைக்க வில்லை என்றால் அதற்கு உங்களுடைய விசுவாச குறைச்சல் தான் காரணம் அல்லது உங்க வாழ்கையில் ரகசியமான பாவங்கள் இருக்கலாம் என்கின்றனர். இதை நீங்க வழக்கமாக பார்க்கும் அந்த வேத பகுதியோடு ஒப்பிட்டு கொஞ்சம் சொல்ல முடியுமா.

டாடா: சரி, எனக்கு ரொம்ப தெளிவாக பேசப்பட்ட தேவ பகுதி எதுன்னா  மாற்கு சுவிசேஷம் தான்,அதனுடைய முதல் அதிகாரம். இயேசு காப்பர் நகூமில் இருக்கிறார் கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருக்கிற எல்லாரையும் சுகமாக்கினார். சூரிய அஸ்தமனம் வரை நடக்குது. இறுதியாக அவர் முடித்த பிறகு மக்கள் கடந்து போகிறார்கள். ஆனா அவர் அடுத்த நாள் அதிகாலமே எழுந்து ஜெபிக்கும்படி தனித்து ஓர் இடத்திற்கு செல்கிறார். சூரிய உதயத்திற்கு பிறகு, ஜனங்க மறுபடியும் வருவாங்க, வியாதியஸ்தர்கள் நிறைய பேரை கூட்டீட்டு வருவாங்க முடவர்கள், இயேசுவை தேடி வருவாங்க. சீமோனும் அவனோடு இருந்தவர்களும் அவரை தேடி சென்றார்கள், ஆனாலும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இறுதியாக, அவரை கண்டுபிடித்த போது, அவர்கள் அவரை நோக்கி, “இயேசுவே

எல்லாரும் உம்மை தேடுகிறார்கள் என்றனர்." அதாவது, எல்லா வியாதியஸ்தர்களும் நோயாளிகளும் மலை அடிவாரத்தில் இருந்தார்கள். அவர் தம்முடைய சீஷர்களிடம் சொல்வதை கவனியுங்கள் வசனம் முப்பத்தி எட்டு, இது அதிர்ச்சியை உண்டாக்குது. மலை அடிவாரத்தில் நின்று கொண்டிருக்கும் மக்களை அவர் பார்க்க கூட இல்லை, அவர்களை பார்த்து சொல்கிறார், "சரி, நாம வேறு எங்காவது போகலாம். பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கு போய் பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே, இதை நல்லா கேளுங்க, இதற்காகவே நான் வந்தேன் என்கிறார்.

இதை நான் வாசித்தபோது, ஒரு விஷயத்தை புரிந்துகொண்டேன் இயேசு கீழே நின்று கொண்டிருந்தவர்களின் வியாதியை குறித்தும் புற்றுநோய் முடக்குவாதம் நோய்களை குறித்து கவலை படவில்லை என்று சொல்ல கூடாது. அவருடைய குறிக்கோள் அவர்களுடைய சரீரபிரகாரமான வியாதி இல்லை என்பதுதான் உண்மை. சுவிசேஷம் தான் அவர்களுடைய குறிக்கோள். சுவிசேஷம் தான் சொல்கிறது, "பாவம் கொல்கிறது, நரகம் உண்மை, அவருடைய ராஜ்ஜியம் உங்களை மாற்ற முடியும். அதற்கான கடவு சீட்டு நான் தான் என்பதே," எப்போதெல்லாம் ஜனங்க தங்களுடைய பிரச்சனைகள் தீர்ந்தால் போதும் என்று இயேசுவை நோக்கி வர்றாங்களோ, அப்போதெல்லாம் இரட்சகர் பின்வாங்கி போயிடுவார்.

இன்னும் இயேசுவின் சுகமளிக்கும் நிலையின் முன்னுரிமைகளை பற்றி அறிந்துகொள்ள ஆராய்ந்து பார்த்தேன், ஏன்னா தேவனாக மனிதனாக இருந்து தளர்ந்த கரங்களை சுகமாக்கினவர் குருடான கண்களை திறந்தவர் தான் இப்போது இந்த காரியத்தையும் சொல்லுகிறாரே அதாவது, "உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால் அதை தரித்து போடு, உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதை பிடுங்கி போடு." ஓ மை குட்னஸ், இதை வாசித்தபோது, நான் இயேசுவின் முன்னுரிமைகளை கண்டேன். வாழ்க்கையில் உள்ளார்ந்த சுகத்தை தான் அவர் பார்க்கிறார். விரல்கள் கால்களுடைய சரீர பிரகாரமான சுகமல்ல, என்னுடைய இருதயம் ஆத்துமாவில் சுகம் வேண்டும் என விரும்புகிறார்.

கொஞ்சம் கொஞ்சமாக நாட்கள் போக போக தேவனுடைய திட்டத்தை புரிந்துகொண்டேன் என்னுடைய பாவத்திலிருந்து என்னை மீட்கவேண்டும், என்னுடைய முரட்டாட்டமான வணக்கா கழுத்துள்ள நிலை மற்றும் சுயநலத்திலிருந்து வெளியேறனும். நான் யார் என்பதை எனக்கு போதிப்பதற்கு இந்த பாடுகளை தான் ஒரு கருவியாக பயன்படுத்துகிறார். ஆனால் இந்த உபத்திரவங்களை தேவன் பயன்படுத்தி என்னை கசக்கி பிழிந்து என்னை புடமிட்டு தூமையாக்குகிறார். அதினால் எனக்குள் இருக்கிறதான குறைவுகள் தேவையற்ற சுபாவங்கள் தன்மைகள் முரட்டுகுணம் மற்றும் கசப்புகளை அகற்றுகிறார். ஓ மை குட்னஸ், இந்த மாதிரியான

காரியங்களில் இருந்துதான் முதலில் நான் சுகம்பெற்று விடுதலை பெறவேண்டும். இந்த ஆழமான சுகத்தை பற்றிதான் சங்கீதம் 139ம் கூட சொல்கிறது, "என்னை ஆராய்ந்து, தேவனே, வேதனை உண்டாக்கும் வழிகள் என்னிடத்தில் உண்டோ என்று என்னை சோத்தித்து ஆராய்ந்திடும்."

ஜான், உண்மையில் இப்பவும் மக்கள் எங்கிட்ட வந்து சொல்வாங்க, "உங்களுடைய சுகத்திற்காக ஜெபிக்க விரும்புறேன், அதை நிராகரிக்கவே மாட்டேன். எப்போதும் அவங்க எனக்காக ஜெபிப்பதை வரவேற்கிறேன். ஆனா சிலரிடம் நான் சொல்வேன், "நீங்க துவங்குவதற்கு முன்பு, உங்ககிட்ட ஒன்னு கேட்கட்டுமா, நீங்க எதன் அடிப்படையில் ஜெபிக்கனுன்னு நா சொல்லட்டுமா? நாளைக்கு காலையில நான் எழுந்திருக்கும்போது ரொம்ப சோர்வடைந்து போகாதபடிக்கு ஜெபிங்க, அதிருப்தியோடு எழும்ப கூடாதுன்னு ஜெபிங்க, நா சும்மா எதையாவது யோசித்து நம்பிக்கையை விட்டுட கூடாதுன்னு ஜெபிங்க, சத்தியத்தை விட்டு விலக கூடாதுன்னு ஜெபிப்பீங்களா? என்னுடைய கணவரிடம் தேவையற்ற வார்த்தைகளை சொல்லி அவரை காயபடுத்தும் நிலை உண்டாகாதபடிக்கு ஜெபிங்க. எந்த இடத்தில் அவருக்கு கனத்தை செளுத்தனுமோ அப்போது அவருக்கு கனத்தை செலுத்தும்படி ஜெபிங்க. ஜெபிங்க... அதாவது, சில காரியங்களில் நா சுகமடைய வேண்டியிருக்கிறது. அந்த பகுதிகளில் நான் சுகமடையனும், அதை விட்டுவிட்டு நடக்க வேண்டும் என்ற

ஆசை என்பதெல்லாம் எனக்கு பெரிதல்ல. நடப்பதை காட்டிலும் மேலான காரியங்கள் இருக்கிறது என்பதை நான் ஆராய்ந்து அறிந்துகொண்டேன், என் இரட்சகரை பிரியபப்டுத்தும் விதமான சுத்த இருதயமும் ஆத்துமாவும் மிகவும் முக்கியமானவைகள் என்று புரிந்துகொண்டேன். இதுதான் ஆழாமான சுகம்.

**ஆன்கர்பெர்க்:** மைகேல், கிறிஸ்தவ கூட்டத்தில் இருந்த போது அவர்களுக்கு போதிய விசுவாசம் இல்லாததினால் தான் தேவன் அவர்களை சுகப்படுத்தவில்லை என்று சொல்லப்பட்டதை கேட்டிருக்கிற ஜனங்களோட நீங்க பேசனும். இதுவரைக்கும் அவங்க அறிக்கை செய்யாத சில ரகசிய பாவங்கள் இருக்கலாம், அதுதான் அவர்களை இன்னும் தூரத்தில் நிறுத்துகிறதா. இதை கேட்ட சிலர் தங்கள் விசுவாசத்திலிருந்து விலகி இருக்கலாம், அவர்களை சிலர் முழுமையான தோல்வியை சந்தித்து இருக்கலாம். அவர்களை ஊக்குவிக்கும் விதமாக திரும்பவும் அவர்களை தேவனிடமாக திரும்ப செய்யும் சில வேத பகுதிகளை காண்பிக்கும்படியாக விரும்புகிறேன்.

இதை துவங்குவதற்கு முன்பு இரண்டு உதாரணங்களை சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தகப்பனார் வீட்டிற்கு வந்தார், அவருடைய வாழ்க்கையில் பெலவீனப்பட்டதே கிடையாது, வயலில் இருந்து வீட்டிற்கு வந்தார். அவர் ஆராதனைகளில் பிரசங்கிப்பார் போதிப்பார், சிறந்த குரூசைடுகளையும் நடத்திடுவார். அவர் வீட்டுக்கு வந்துட்டு பரிசோதனைக்காக கடந்து சென்றார். டாக்டர் எங்கிட்ட வந்து

சொன்னாங்க, அவருட மகன்தான, இப்ப, “உங்க அப்பா இன்னும் 30 நாள்தான் உயிரோடு இருப்பார், குறைந்த பட்சம் 90 நாட்கள், நீங்கதா இதை அவருக்கு சொல்லணும் என்றார்.” அவருடைய சரீரம் முழுவதும் வியாதி பரவியிருந்தது. நான் அவரிடம் பேசினேன், அந்த வாரம் முழுதும் அவருக்கு உதவியாக கூட இருந்து பேசி, புரியவைத்தேன். எங்க அப்பாவோட சுகத்திற்காக ஜெபித்தோம், தேவன் அவருக்கு 10 வருடத்தை கூட்டி கொடுத்தார். என்னோட நெருங்கிய நண்பர், ஊழியத்தில் என்னோடு சேர்ந்து 25 வருடங்களாக துணை எழுத்தாளராக இருந்தார், இங்க இருக்கிறவங்கல்ல அவரை விசுவாசமுடையவர்கள் யாரும் இருக்க முடியாது, அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். எல்லா பாஸ்டர்களும் டீக்கன்களும் ஒன்றாக கூடி வந்து. அவருக்காக ஜெபித்தோம், எண்ணெய் பூசி ஜெபித்தோம், தேவன் நிச்சயம் அவரை சுகப்படுத்துவார் என்று எண்ணினோம். ஒரு மாதத்தில் இறந்துவிட்டார். என்னோட அம்மாக்கும் ALS இருந்தது. தேவன் அவர்களை சுகப்படுத்தும்படிக்கு ஜெபித்தோம். இரண்டு வருடங்களில் அவர் இறந்துவிட்டார். ஒருத்தரை தேவன் சுகமாக்கினார், இரண்டுபேர் சுகமடையல. இப்ப, வேதத்தில் சில வசனங்கள் இருக்குது, அந்த வசனங்களை பற்றி பார்க்க வேண்டும் என விரும்புகிறேன். அதுல எதுவாக இருந்தாலும் சரி.

**எஸ்லே:** நிச்சயமா நாம அதிகமா பார்த்திருக்கிற வசனம் எதுன்னு பார்த்தா பவுலுடைய பகுதிதான். 2 கொரிந்தியர் 11ம் அதிகாரத்தில்

என்ன நடக்கிறது என்பதை குறித்து கொஞ்சம் தெளிவாக பார்க்க முடியும், அங்க அவர் மாம்சத்தில் இருக்கிற முள்ளை பற்றி சொல்கிறார். “எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் மேன்மை பாராட்டாதபடிக்கு எனக்கு இப்படி ஆயிற்று, எல்லாத்தையும் இது தட்டி வைக்கிறது - “நான் என்னை குறித்து மேன்மை பாராட்டாதபடிக்கு,: பவுல் சொல்கிறார் - “என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டு இருக்கிறது, என்னை நான் உயர்த்தாதபடிக்கு அது என்னை குட்டும் சாத்தானுடைய தூதனாக இருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படி மூன்று முறை நான் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர் என் கிருபை உனக்கு போதும் பெலவீனத்தில் என் பெலன் பூரணமாக விளங்கும் என்றார்.” அப்பறமா பவுல் சொல்றாரு, “ஆகையால் இப்படிப்பட்ட பெலவீனங்களில் நான் பிரியபடுகிறேன், நோக்கம், ‘ கிறிஸ்துவின் வல்லமை எனக்குள் வாசமாக இருக்கும்படிக்கு என்கிறார்.” இந்த தெளிவு உங்களுக்கு புரிந்திருக்கும், அதாவது, அப்போஸ்தலர்களுக்கு அப்போஸ்தலர், அவரே.... எப்பேர்பட்ட உபத்திரமானாலும் சரி, எந்தமாதிரியான இக்கட்டானாலும், தேவன் அதை அகற்றாமல் இருந்திடலாம் என்கிறார்.

மேலும் புதிய ஏற்பாட்டில் பல இரத்த சாட்சிகளை பார்க்க முடியும், மறுக்க முடியாத காரியத்தை பிரசங்கித்ததினால் ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டான், யாக்கோபு, கொடுமையாக

கொல்லப்பட்டான். விசுவாச வீரர்களை குறித்து நாம் பார்க்க முடியும். எதிர்பாராதவிதமாக, அதாவது, ஜான், எனக்கு ஆர்ச்சரியமா இருக்கும். அதாவது, ஆரோக்கியம் ஐசுவரியம் என்பதை முன்பாக நிறுத்தி சொல்பவர்களுக்கு, தேவன் என்ன சொல்லுவார் என்பதை நினைத்து அதிகமாக சிந்தித்து பார்ப்பேன். எனக்கு அது வியப்பாக இருக்கும், ஏன்னா எப்பவும் யோபை குறித்து அதிகமாக பார்ப்போம், பவுல், அப்பறம் யாக்கோபு, அடுத்து ஸ்தேவான். தேவன் எப்போதும் நமக்காக செயல்படுகிறவராக இருப்பார், அதற்கு உங்களுக்கு விசுவாசம் மட்டும் இருந்தா போதும். பவுலுக்கு போதிய விசுவாசம் இல்லாமல் இருந்ததோ? பவுல் உலகத்திற்கு தேவனுடைய சுவிசேஷத்தை பிரசங்கிக்க தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர். அப்படி இருந்தும் இந்த சூழ்நிலைகளில் தேவன் அவரை சுகப்படுத்தவே இல்லையே.

ஜோனி ஏற்கனவே சொன்ன ஒரு காரியத்தை மறுபடியும் சொல்ல நினைக்கிறேன் மாற்கு 1. கிறிஸ்து ஒவ்வொரு முறையும் ஒருவரை சுகப்படுத்திய போது அது ஆவிக்குரிய நிலையின் சரீர பிரகாரமான வெளிப்பாடாக இருந்தது என்று அடித்து சொல்ல முடியும் என நினைக்கிறேன். அதாவது வேதனை வலி புற்றுநோய் என்பதிலிருந்து சுகம் வேண்டும் என்பது மட்டுமல்ல, அது சரீரத்தின் வெளிபாடு. குருடராயிருக்கலாம், ஆவிக்குரிய குருடர்கள். செவிடாக இருக்கலாம், ஆவிக்குரிய செவிடர்கள். முடமாக இருக்கலாம், ஆவிக்குரிய முடவர்கள். அப்ப ஆவிக்குரிய பெலவீனத்தின் சுகம் தான் சரீரத்தில்

வெளிப்படும் அற்புதங்களாக இருக்கிறது. இந்த சுகத்தை பற்றிதான் அவர் சொல்லிக்கொண்டு இருக்கிறார், தற்காலிகமான உலகத்தின் நிலையை சார்ந்தது அல்ல.

**ஆன்கர்பெர்க்:** சரி. ஜோனி பலவிதமான சுகமளிக்கும் கூட்டங்களுக்கு போயிட்டு வந்திருப்பாங்க, ஒன்றன் பின் ஒன்றாக போயிட்டு வந்திருக்கலாம். இந்த ஒன்று மட்டுமில்ல, அடுத்தது அடுத்ததுன்னு போயிருப்பாங்க. இங்க சரியாகலையா, அப்ப அடுத்ததை முயற்சிக்கலாம். பவுல் ஒரு முறை மட்டும் கேட்டுட்டு விடல, இரண்டு முறை மட்டும் கேட்கல; தொடர்ந்து அவருக்கு அது உறுத்தலாக இருந்திருக்கும், அவர் மூன்று முறை கேட்டார். அதற்கு பதில் என்ன தெரியுமா, “இல்ல, என் கிருபை உனக்கு போதும்,” அதை அவர் ஏற்றுகொண்டார். அவருக்கு போதுமான விசுவாசம் இல்லை என்பதனால் அல்ல, அவர்க்கு இரகசிய பாவம் இருந்ததனால் அப்படி நடக்கல, அந்த வியாகுலம் இருக்க வேண்டும் என்பது தேவன் பவுலுக்காக கொண்டிருந்த சித்தம். இதை நம்முடைய மனதில் ஏற்றுகொள்வது கொஞ்சம் கடினம் தான், மைகேல், இருந்தாலும் வேதம் இதைதான் சொல்லுகிறது. அவருடைய உடன் வேலையாளான துரோப்பீலு, சரியா, அவன் வியாதிப்பட்டு பட்டணத்தில் இருந்தான். அவனை அதிகமாக நேசித்தார். அவனை குணபடுத்த அவருக்கு வல்லமை இருக்கு. இவன் துரோப்பீலுவுக்காக ஜெபித்திருப்பார். ஆனா வேதாகமம் என்ன சொல்கிறது? அவனை வியாதிப்பட்டவனாக

பட்டணத்தில் விட்டு வந்தான். இப்ப என்ன சொல்றேன்னா, உங்களுடைய குறை என்று சொல்லப்பட்ட மக்களுக்கு சொல்லுகிறேன், அப்படியில்ல! ஒருவேளை தேவன் உங்களுக்கு சொல்லுகிறாரோ, "இதுதான் நான் உனக்காக வைத்திருப்பது, என்னோட கிருபை உனக்கு போதுமானதாக இருக்கும்." ஜோனி, உங்களுக்கு பிடித்தமான ஒரு வசனம் இருக்குதுல்ல. அதுலதான் கர்த்தருடைய வழிகளில் மனமகிழ்ச்சியாக இருங்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த வசனத்தை பற்றி சொல்லுங்க.

டாடா: சரி, சங்கீதம் 37 நான்கு, "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு நிறைவேற்றிடுவார்." ஓ, ஜான், ரொம்ப நாளைக்கு என்னுடைய இருதயத்தின் விருப்பங்கள் எல்லாம், "என்னை நடக்க செய்யுங்க, ஆண்டவரே." என்னுடைய கரங்களை மறுபடியும் பயன்படுத்தும்படி செய்திடும். இந்த வேதனை நீக்கிடும் என்றிருந்தது." அதாவது, இதுதான் என் இருதயத்தின் விருப்பமாக இருந்தது. இந்த காரியங்களை அகற்றிவிடும்படி தேவனுக்கு முன்பாக கதறியிருக்கிறேன். ஆனா அவர் அப்படி செய்யவே இல்லை. இன்னும் ஆழமா தேட ஆரம்பித்தேன். எங்கிட்ட என்ன குறை இருக்கு? அவருடைய வார்த்தையில் நான் பார்க்க வேண்டிய காரியம் என்ன? எவ்வளவு அதிகமா வேதத்தை வாசித்தேனோ, அவ்வளவாய் தேவனுடைய இருதயத்தை புரிந்துகொண்டேன். கிறிஸ்துவை சிலுவையில் பார்த்த போது அவர்

அங்கே முடமாக இருந்தால், மரத்தில் அடிக்கப்பட்டு இருந்தார், எனக்காக அப்படியானார், மனதுருக்கம் நிறைந்தவர், வைராக்கியமா, பாடுகளை ஏற்றார், மறுபடியும், அவருக்கான எனது அன்பு புதுப்பிக்கப்பட்டது.

இந்த இயேசுவை எவ்வளவு அதிகமாய் அறிந்துகொண்டேனோ, இயேசுவின் இந்த பகுதியை, வேதனையோடு வியாகுலத்தை அடைந்த மனிதர், அவ்வளவாய் அவரை நான் நேசிக்க துவங்கினேன். அவருடைய விருப்பங்கள் என்னுடைய விருப்பங்களாக மாறத்துவங்கியது. உங்களுக்கு அது தெரிவதற்கு முன்பு நான் என் கால்களை பார்ப்பதை நிருத்தீட்டேன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பிரியப்படுத்துவதை விரும்பினேன். அவருடைய மனவிருப்பங்கள் என்னது? சரி, அவருடைய விருப்பம் அவருடைய சுவிசேஷம் எங்கும் பரவ வேண்டும், அவருடைய ராஜ்ஜியம் பிரச்தாபமாகனும், தேவனுடைய குடும்பத்தின் கொடியானது நாத்திகர் இறை நம்பிக்கை இல்லாதவர் போன்ற ஜனங்களுடைய இருதயமாகிய நிலத்தில் நாட்டப்படவேண்டும். இதுதான் தேவனுடைய விருப்பங்கள்.

துரிதமா சொல்றேன், ஜான், ஏன் தேவன் சுகப்படுத்துவது இல்லை? எனக்கு என்ன தொட்னுதுன்னா நாம சுகத்தை பெற்றுகொள்ளும்போது தேவனை மறந்து விடுகிறோம். எப்போதும் அவர் நமக்கு தேவைபடுவதில்லை. ஆனா நாம காயாப்டும்போது வேதனை உண்டாகும்போது, நாம காலையில எழுந்ததும் என்ன சொல்வோம்,

“ஆண்டவரே, நீர் எனக்கு வேண்டும்,” மேலும் அவருடைய இருதயமும் வியாகுலத்தோடு தம்மிடத்தில் வருகிறவர்கள் பக்கம் சாய்கிறது, “என்னால இதை தனியாக செய்ய முடித்து, ஆண்டவரே, எனக்கு உதவும் என்பவர்கள் பக்கம்.” ஒருவேளை அவர் சரீர பிரகாரமான சுகத்தை அருளாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்; ஏன்னா அவர் விருப்பம், மைகேல் சொன்னது போல, ஆவிக்குரிய கண்களை திறக்கனும் என்பதுதான், ஆவிக்குரிய செவிகளின் செவிட்டு தன்மையை மாற்றனும், முடமாக கிடக்கும் ஆவிக்குரிய கால்கள் சரியான பாதையில் நடக்க வேண்டும் என்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** கடைசியாக உங்களுக்கு ஒரு கேள்வி. இரண்டு வருடங்களாக யாரும் உங்ககிட்ட தேவனை பற்றி பேசுவதை நீங்க விரும்பல. நிறைய பேர் ஜெபித்து கொண்டு இருக்கிறார்கள், ஆனால் சுகம் கிடைக்கல, அதனால சபையை விட்டுட்டாங்க. இப்போது அப்படிப்பட்ட நிலையில் இதை கேட்டு கொண்டு இருப்பவர்களுக்கு நீங்க என்ன ஆலோசனை சொல்வீங்க.

டாடா: சரி, வேதம் சொல்கிறது நாம் அழுகிறவர்களோடேசேர்ந்து அழ வேண்டும். உங்களுடைய வேதனையை புரிந்துகொள்கிறவர்கள் யாராவது இருப்பார்கள் என்றால், இன்னும் உங்களுடைய ஆழமான ஏமாற்றங்கள் சுகம் பெறாமல் இருந்தால், உங்கள் தேவனாகிய கர்த்தரை பாருங்கள். ஆனா ஒன்றை புரிந்துகொள்ளுங்கள் உங்கள் இரட்சகர் உங்களை போலவே எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும்

பாடுகளும் உபத்திரவங்களும் அனுபவித்தவராக இருக்கிறார். அவருடைய விருப்பம் எல்லாம் உங்களுக்கு இருதயத்தில் அவருடைய நம்பிக்கையை விதைப்பதும், அவருடைய சந்தோசம், அசைக்க முடியாத ஆனந்தம், அளவுகடந்த சமாதானம், அவருக்குள் அமர்ந்திருக்கும் ஆத்துமாவை உண்டாக்குவதுதான் அப்படியிருந்தால் அது சுகத்தை பெற்றுகொள்வதற்கு இணையாக இருக்கும், நடப்பதற்கு இணையாக கரங்களை பயன்படுத்துவதற்கு இணையாக இருக்கும். தேவன் அவ்வளவு நல்லவர். இயேசு ஒப்பிட்டு பார்ப்பதற்கும் மேலானவர், அவருடைய நண்பராக இருக்க என்ன வேணாலும் செய்யலாம், சரீர சுகத்தில் அனுபவிக்காமல் இருந்தாலும் பரவாயில்லை.

**ஆன்கர்பெர்க்:** இயேசு தோட்டத்தில் சொன்ன வார்த்தைகளையும் நினைவு கூறுகிறேன், “தேவனே, இது என்னை விட்டு நீங்க கூடுமானால்? அதற்கான பதில் இல்லை என்பதுதான். அவர் தேவ சித்தத்தை நிறைவேற்றினார், நம் எல்லாருக்காகவும் செய்து முடித்தார்.

டாடா: நிச்சயமா.

**ஆன்கர்பெர்க்:** ஓகே. சரீர சுகத்தை விட மேலான பல காரியங்கள் இருக்கிறது,. அடுத்த வாரம் அதில் சிலவற்றை குறித்து பேச இருக்கிறேன். அதுல இன்னொரு தலைப்பையும் பாப்போம், கடுமையான வியாதியிலும் இக்கட்டான சூழ்நிலையிலும்

வேதனையோடு இருக்கிற மக்கள் எப்படி தேவனுக்கு முக்கியமானவர்களாக இருப்பார்கள்? அவங்க வாழ்க்கைக்கு அர்த்தம் இருக்குதா, அவங்க வேதனை தேவனால் கண்டுகொள்ளப்படாததாக அவங்களுக்கு நித்தியத்தின் பலன் இல்லாமல் போகிட வாய்ப்புண்டா? சில சுவாரசயமான சம்பவங்கள் இருக்கிறது, இரண்டு பேருக்கும், மரிக்க ஆயத்தமாக தயாராக முன்நேர்ப்பாட்டுடன் இருந்தவர்கள், அதிக வேதனையாக இருப்பதால் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்தவர்கள். நீங்க அப்படிப்பட்டவர்களோடு பேசுகிறீர்கள் அவங்க, வாழ்க்கை எப்படி இருந்தாலும், தேவனால் அவர்களை கொண்டு பெரிய காரியங்களை செய்ய முடியும். இது அருமையான விஷயம், நேயர்களே. அடுத்த வாரம் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம்

செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.